# திருப்பாவை

திருமதி. சே.மாசிலாமணி
உதவிப்பேராசிரியை
தமிழ்த்துறை (சுயநிதிப்பிரிவு)
கார்டமம் பிளாண்டர்ஸ்  அசோசியேசன் காலேஜ்
போடிநாயக்கனூர்

# திருப்பாவை



- **திருப்பாவை** பன்னிரண்டு வைணவ ஆழ்வார்களில் ஒருவரான ஆண்டாள் பாடிய நூல் ஆகும்.
- இது 30 பாடல்களால் ஆனது.
- வைணவப் பக்தி நூல்களின் தொகுப்பான நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தின் 474 தொடக்கம் 503 வரையுள்ள பாடல்கள் திருப்பாவைப் பாடல்கள் ஆகும்



**ஆண்டாள்** தமிழகத்தில் 7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வைணவ ஆழ்வார்களில் ஒருவர்

பன்னிரு ஆழ்வார்களில் இவர் ஒருவரே பெண். திருப்பாவை, நாச்சியார் திருமொழி என்னும் இரண்டு பாடற் தொகுதிகளை இயற்றியுள்ளார். வைணவ சமய நூல்கள் கூறும் இவரது வரலாறு இறைவன் மீது இவர் கொண்டிருந்த காதலை நமக்கு எடுத்துரைக்கிறது., ஆண்டாள் பூமிப் பிராட்டியின் அவதாரமாகக் கருதப்படுகிறார்.

தமிழ் நாட்டில் மார்கழி மாதத்தில் கன்னிப் பெண்கள் பாவை நோன்பு நோற்றனர்.

அதிகாலைப் பொழுதில் விடியும் முன்பே எழும் கன்னியர், பிற பெண்களையும் துயில் எழுப்பிக்கொண்டு ஆற்றில் நீராடி இறைவனைத் துதித்து வழிபடுவர்.

இதனைப் பின்னணியாகக் கொண்டு எழுதப்பட்ட நூல் தற்காலத்திலும் வைணவ ஆலயங்களில் திருப்பாவை பாடல்கள் பாடப்பட்டு வருகின்றன.

# திருப்பாவைச் சிறப்பு

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்நீராடப்
போதுவீர் போதுமினோ நேரிழையீர்சீர்மல்கும்
ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்கூர்வேல்
கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்ஏரார்ந்த கண்ணி
யசோதை இளஞ்சிங்கம்கார்மேனி செங்கண் கதிர்மதியம்
போல்முகத்தான்நாராயணனே நமக்கே பறை
தருவான்பாரோர் புகழப் படிந்தேலோர்
எம்பாவாய்

# பொருள்

அழகிய அணிகலன்களை அணிந்த கன்னியரே! சிறப்பு மிக்க ஆயர்பாடியில் வசிக்கும் செல்வவளமிக்க சிறுமிகளே! மார்கழியில் முழுநிலா ஒளி வீசும் நல்ல நாள் இது. இன்று நாம் நீராடக் கிளம்புவோம். கூர்மையான வேலுடன் நம்மைப் பாதுகாத்து வரும் அரிய தொழிலைச் செய்யும் நந்தகோபன், அழகிய கண்களையுடைய யசோதாபிராட்டி ஆகியோரின் சிங்கம் போன்ற மகனும், கரிய நிறத்தவனும், சிவந்த கண்களை உடையவனும், சூரியனைப் போல் பிரகாசமான முகத்தையுடையவனும், நாராயணனின் அம்சமுமான கண்ணபிரான் நமக்கு அருள் தர காத்திருக்கிறான். அவனை நாம் பாடிப் புகழ்ந்தால் இந்த உலகமே நம்மை வாழ்த்தும்.